# இந்தோ- சுவிஸ் ஆயுர்வேத பவுண்டேஷன் உருவாக்கம்

கோவை, ஏப். 22

இந்திய மருத்துவ முறையான ஆயுர்வேதத்தை உலகளாவிய அளவில் பிரபலப்படுத்தும் வகையில் கோவையில் உள்ள ஆர்ய வைத்திய பார்மசியும், சுவிட்சர்லாந்து நிறுவனமும் இணைந்து இந்தோ-சுவிஸ் ஆயுர்வேத பவுன்டேஷன் (ஐஎஸ்ஐ) என்ற அமைப்பை உருவாக்கி உள்ளன. இதன்மூலம் ஆயுர்வேத மருத்துவத்தை உலக சுகாதார நிறுவனத்தின் விதிகளுக்கு உட்பட்டு உலகளாவிய அளவில் ஆய்வு செய்து மேம்படுத்துவது, அதற்கான வசதிகளை ஏற்படுத்துவது, ஆயுர்வேத மருத்துவத்தை பயில இரு நாட்டு கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவது, சர்வதேச ஆயுர்வேத மையம் உருவாக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐஎஸ்ஏவின் முதல் கூட்டம் கோவை மாங்கரையில் உள்ள பதஞ்சலி புரியில் நேற்று (ஞாயிறு) நடந்தது. இதை கோவை ஆர்ய வைத்ய பார்மசி நிர்வாக இயக்குநர் பி.ஆர் கிருஷ்ணகுமார்ஜி தெரிவித்தார்.